**இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபை - 2011**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும காட்டும் வகையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தலில் தாமதம்

2003 பெப்ரவரி 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக நிதி ஆண்டு முடிவடைந்த 60 நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 91 நாட்கள் தாமதத்துடன் 2012 மே 31 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

#### 1.2.2 இலங்கை கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 03 இன் பிரகாரம் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் உள்ளடக்கப்படலாகாத நீண்டகாலப் பொறுப்புக்களின் மீதியாகிய ரூபா 5,658,067 பெறுமதியான பிணை முறிக் கடன்பட்டோர் மீதி உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஆ) அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்படாது 15 ஆண்டுகளுக்கு மேல் பழமையான ரூபா 4,746,939 பெறுமதியான பிணை முறிக் கடன்பட்டோர் மீதிகளை அறவீடு செய்தல் நிச்சயமற்றதாகக் காணப்பட்டதனால் இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 36 இன் பிரகாரம் நிகழத்தக்க சொத்துக்களாக ஐந்தொகைக்கான பொறுப்புக்களின் மூலம் மாத்திரம் காட்டப்பட வேண்டிய போதிலும் கடன்பட்டோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 18 இற்கு முரணாக டார்டன்ட்பீல்ட், கலேவத்த, இரத்மலானை ஆகிய அலுவலகங்களின் கட்டிடங்கள் சார்ந்த

நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலைகள் முறையே ரூபா 599,022, ரூபா 385,235 மற்றும் ரூபா 587,770 தொகைகள் கட்டிடக் கணக்கில் பதியப்பட்டிருந்தன.

### 1.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 15,607,989 தொகையான இருப்புக்கள் வருடாந்தம் மெய்மையாய்வு செய்யப்படாது புத்தகப் பெறுமதியின் அடிப்படையில் கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருந்தன. எனவே சேதங்கள் மற்றும் காணாமல் போதல் முதலிய நட்டங்கள் கணக்குகளின் மூலம் வெளிப்படுத்தப்ப ட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) ரூபா 4,000,000 பெறுமதியான திறைசேரி மானியப் பெறுவனவு காசோலைகளை இரத்துச் செய்யும் பதிவைப் பிழையாகப் பதிவுசெய்ததன் காரணமாக ரூபா 4,000,000 பெறுமதியான கடன்பட்டோர் மீதியும் கடன்கொடுத்தோர் மீதியும் உருவாகியிருந்ததுடன் அந்த அளவினால் கடன்பட்டோரும் கடன்கொடுத்தோரும் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(இ) நிறுவனத்தின் பெறுமானத்தேய்வுக் கொள்கைக்குள் பெறுமானத்தேய்வு செய்யப்படுவதாகக் காட்டப்படாதிருந்தும் தேயிலை மீள்நடுகை மற்றும் கறுவா மீள்நடுகை ஆகிய சொத்துக்களுக்காக மீளாய்வாண்டில் ரூபா 110,465 தொகையான பெறுமானத் தேய்விற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

### 1.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 7,762,507 பெறுமதியான 10 பெறவேண்டிய மீதிகளும் ரூபா 3,904,237 பெறுமதியான 134 சாதாரண கடன்பட்டோர் மீதிகளும் ரூபா 2,255,278 பெறுமதியான 21 ஏனைய கடன்பட்டோர் மீதிகளும் ரூபா 411,122 பெறுமதியான 11 வைப்பு மீதிகளும் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையான மீதிகள் என அவதானிக்கப்பட்டதுடன் அறவீடு செய்யப்பட்டமைக்கான உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 2,061,814 பெறுமதியான செலுத்தவேண்டிய முற்பணங்களின் 07 மீதிகளும் டார்டன்ட்பீல்ட் தோட்டத்தின் கடன்கொடுத்தோர் மீதியில் உள்ளடக்கப்பட்ட ரூபா 341,373 பெறுமதியான 02 மீதிகளும் தொடர்ச்சியாகக் காணப்பட்டு வரும் மீதிகளாக இருந்ததுடன் அவற்றைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

பின்வரும் கணக்கு விடயங்களுக்கு எதிராகக் காட்டப்பட்டுள்ள சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

| கணக்கு விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| நிலையான சொத்துக்கள் | 296,197,981 | நிலையான சொத்துப் பதிவேடு |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | |
| சாதாரண கடன்பட்டோர் | 10,428,895 | கடன்பட்டோர் மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் |
| பெறவேண்டிய மீதிகள் | 6,180,006 | மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | |
| கடன்கொடுத்தோர் | 26,062,940 | கடன்கொடுத்தோர் காலப்பகுப்பாய்வு |
| பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்கள் | 1,232,195 | மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் |
| | 340,102,017 | |

### 1.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| விபரம் | இணக்கமின்மை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| நி.பி 257 | ரூபா 143,993 பெறுமதியான கொடுப்பனவு சான்றுறுதிகள் உரிய உத்தியோகத்தர்களால் சான்றுபடுத்தப்பட்டிருக்கவில்லை. |
| நி.பி 371(2) | முற்பணங்கள் அவை பெறப்பட்ட செயற்பாடு பூர்த்தியடைந்ததும் உடனடியாகத் தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 102,730 பெறுமதியான முற்பணத்தைத் |

| | | |
|---|---|---|
| | | தீர்த்துவைப் பதற்காக 01 மாதத்திலிருந்து 05 மாதங்கள் வரையான காலம் எடுத்திருந்தது. |
| | நி.பி 571(3) | ரூபா 42,796 தொகையான நானாவித வைப்புக்கள், வைப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து 16 ஆண்டுகளை மிகைத்திருந்த போதிலும் நி.பி பிரகாரம் அரசாங்க வருமானத்திற்கு செலவுவைக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 6.3.6 ஆம் பந்தி | ரூபா 282,500 பெறுமதியான அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காகக் கோரப்பட்ட கேட்பு மனுக்களைத் திறக்கும் கூட்டத்தில் ஆகக் குறைந்தது 02 அங்கத்தவர்கள் இருக்குவேண்டிய போதிலும் ஒரு அங்கத்தவர் மாத்திரம் வருகைதந்தமைக்கு கையெழுத்திடப்பட்டிருந்தது. |
| (இ) | எம்எப் 6/1/3/2000 ஆம் இலக்க நிதி திட்டமிடல் சுற்றுநிருபம் | வெளிநாட்டுப் பயண கடவுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்வதற்காக மேற்கொள்ளப்படுகின்ற செலவுகளை மீளளிப்புச் செய்தல் ரூபா 2,500 ஆக இருந்த போதிலும் ரூபா 7,500 மீளளிப்புச் செய்யப்பட்டதன் காரணமாக ரூபா 5,000 மிகையாகச் செலவு செய்யப்பட்டிருந்தது. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான சபையின் செயற்பாட்டு விளைவுகள் திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 183,100,000 தொகையான மானியத்தைக் கணக்கிற்கு எடுத்துக்கொண்டதன் பின்னர் ரூபா 18,547,965 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்காக திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 181,050,000 தொகையான மானியத்தைக் கணக்கிற்கு எடுத்துக்கொண்டதன் பின்னர் ரூபா 20,184,562 மிகையாக இருந்தது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவு ரூபா 1,636,597 வீழ்ச்சியைச் சுட்டிக்காட்டியிருந்ததுடன் அதற்காக தாபனம் மற்றும் நிர்வாகச் செலவுகள் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 8% ஆல் அதிகரித்திருந்தமை தாக்கமளித்திருந்தது.

**2.1.2** டாடன்பீல்ட் தோட்டம் மற்றும் குருவிட்ட தோட்டத்தின் முறையே 181.61 ஹெக்டயர் மற்றும் 68.79 ஹெக்டேயர்கள் அளவான விளைச்சல் தரும் இறப்பர் பயிர்ச்செய்கை தொடர்பான நிதிசார் விளைவுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறையே 10% மற்றும் 30% ஆல் அதிகரித்திருந்தன. விபரம் கீழே தரப்படுகின்றது.

| தோட்டம் | 2011 | 2010 | அதிகரிப்பு | அதிகரிப்பின் சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| டார்டன்ட்பீல்ட் | 55,595,555 | 50,497,431 | 5,098,124 | 10 |
| குருவிட்ட | 31,741,133 | 24,364,387 | 7,376,746 | 30 |

### 2.1.3 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மானியத்துடன் ஒப்பிடுகையில் சபையின் மொத்த வருமானம் ரூபா 196,888,110 ஆக இருந்ததுடன் அதனை முன்னைய ஆண்டிற்கான ரூபா 188,829,435 தொகையான மொத்த வருமானத்துடன் ஒப்பிடுகையில் 4% ஆன அதிகரிப்பாகும்.

(ஆ) மீளாய்வாண்டின் போது நிதியத்தின் மொத்தச் செலவு ரூபா 259,821,971 ஆக இருந்ததுடன் அதனை முன்னைய ஆண்டிற்கான ரூபா 239,361,885 தொகையான மொத்த செலவுகளுடன் ஒப்பிடுகையில் 9% ஆன அதிகரிப்பாகும்.

(இ) டார்டன்ட் பீல்ட், குருவிட்ட, குமாரவத்தை, நாரம்பொல ஆகிய நான்கு தோட்டங்களில் உழைத்த இலாபம் மீளாய்வாண்டின் போது ரூபா 18,547,965 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் அது ரூபா 70,717,013 ஆக இருந்ததனால் மீளாய்வாண்டிற்கான இலாபத்தின் அதிகரிப்பு 15% ஆகும்.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 செயலாற்றல்

(அ) கீழே விபரிக்கப்பட்டுள்ள தோட்டங்கள் தொடர்பாக மீளாய்வாண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானம் மற்றும் செலவுகளின் நிலைமை தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றது.

| | ஆண்டிற்கான வருமானம் | ஆண்டிற்கான செலவுகள் | மிகை/ பற்றாக்குறை |
|---|---|---|---|
| டார்டன்ட்பீல்ட் | 101,264,758 | 45,669,203 | 55,595,555 |
| குருவிட்ட தோட்டம் | 47,799,570 | 16,058,437 | 31,741,133 |

| | | | |
|---|---|---|---|
| குமாரவத்தை | 1,116,840 | 4,730,467 | (3,613,627) |
| நாரம்பொல வத்தை | 208,456 | 2,449,691 | (2,241,235) |
| | -------------------- | ---------------------- | ---------------------- |
| | 150,389,624 | 68,907,798 | 81,481,827 |
| | ========= | ========= | ========== |

டார்டன்ட்பீல்ட் மற்றும் குருவிட்ட தோட்டங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகளை மிகைத்த இலாப நிலைமை அவதானிக்கப்பட்ட போதிலும் குமாரவத்தை மற்றும் நாரம்மல தோட்டங்களுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானங்களை மிகைத்து செலவுகள் செய்யப்பட்டதன் காரணமாக முறையே ரூபா 3,613,627 மற்றும் ரூபா 2,241,234 தொகையான பற்றாக்குறைகள் அடையப்பட்டிருந்தன.

**(ஆ) இறப்பர் பால் உற்பத்தியின் செயலாற்றல்**

குருவிட்ட தோட்டம் மற்றும் டார்டன்ட்பீல்ட் தோட்டத்தின் இறப்பர் பால் உற்பத்தி தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2011 ஆம் ஆண்டு | | | | 2011 ஆம் ஆண்டு | | | | வேறுபாடு | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பால் வெட்டப்படுகின்ற தோட்டங்கள் | இறப்பர் பயிர்ச் செய்கைக் காணியின் இடப்பரப்பு | ஒரு ஹெக்டயருக் கான உற்பத்தி | ஆண்டிற்கான மொத்த உற்பத்தி அளவு | உற்பத்தியின் பெறுமதி | இறப்பர் பயிர்ச் செய்கைக் காணியின் இடப்பரப்பு | ஒரு ஹெக்டயருக் கான உற்பத்தி | ஆண்டிற்கான மொத்த உற்பத்தி அளவு | உற்பத்தியின் பெறுமதி | அளவு (குறைவு/ அதிகரிப்பு) | பெறுமதி (குறைவு/ அதிகரிப்பு) |
| | ஹெக்டயர் | கி.கிராம் | கி.கிராம் | ரூபா | ஹெக்டயர் | கி.கிராம் | கி.கிராம் | ரூபா | கி.கிராம் | ரூபா |
| டார்டன்ட்பீல்ட் | 181.61 | 1016 | 184596 | 94,080,018 | 193.04 | 968 | 186796 | 79,923,747 | (2200) | 14,156,271 |
| குருவிட்ட தோட்டம் | 68.79 | 1495 | 102825 | 45,534,926 | 68.79 | 1477 | 101607 | 37,195,814 | 1218 | 8,339,112 |

மேலுள்ள தகவல்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) குருவிட தோட்டத்துடன் ஒப்பிடுகையில் டார்டன்ட்பீல்ட் தோட்டத்தில் ஒரு ஏக்கருக்கான இறப்பர் பால் உற்பத்தி 2010 ஆம் ஆண்டில் 509 கிலோ கிராமினாலும் 2011 ஆம் ஆண்டில் 479 கிலோ கிராமினாலும் வீழ்ச்சியுற்றிருந்தது. குருவிட்ட தோட்டத்தின் பயிர்கள் ஆராய்ச்சி பயிர்களாக இருத்தல். மழைக் காப்பினைப் பயன்படுத்தல், காலநிலைத் தன்மைகள், நில அமைவிடம், குருவிட்ட காணியின் பரப்பளவு குறைவாக உள்ளதனால் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் இலகுவாக இருத்தல், பயிர்களின் வயது ஆகிய காரணங்களினால் குருவிட்ட தோட்டத்தில் ஒரு ஹெக்டயருக்கான இறப்பர் பால் உற்பத்தியை டார்டன்ட்பீல்ட் தோட்டத்துடன் ஒப்பிடுகையில் அதிகரித்தமைக்கு பிரதான காரணமாக இருந்தது.

(ii) டார்ட்னட்பீல்ட் தோட்டத்தில் 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான இறப்பர் பால் உற்பத்தி ஒரு ஹெக்டயருக்கு 48 கிலோ கிராமினால் அதிகரித்திருந்தது.

(iii) குருவிட்ட தோட்டத்தில் 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான இறப்பர் பால் உற்பத்தி ஒரு ஹெக்டயருக்கு 18 கிலோ கிராமினால் அதிகரித்திருந்தது.

(iv) டார்டன்ட்பீல்ட் தோட்டத்தில் மீளாய்வாண்டின் போது மொத்த உற்பத்தி அளவு 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2200 கிலோ கிறாம்களினால் குறைவடைந்திருந்தும் உற்பத்திப் பெறுமதி ரூபா 14,156,271 இனால் அதிகரித்திருந்தது. 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது குருவிட்ட தோட்டத்தில் ஒரு கிலோ கிராம் இறப்பரின் சராசரி விலை ரூபா 11.86 இனால் குறைவடைந்திருந்ததுடன் இறப்பர் பாலின் ஒரு கிலோவிற்கான சராசரி விலை ரூபா 85.44 இனால் அதிகரித்திருந்தது. இதற்கிணங்க ஆண்டிற்கான மொத்த உற்பத்திப் பெறுமதி ரூபா 8,339,112 இனால் அதிகரித்திருந்தது.

(இ) 10 ஆண்டுகளுக்கு முன்னர் சபையினால் ஆரம்பிக்கப்பட்டு 100 ஆராய்ச்சி செயற்திட்டங்கள் தொடர்பாக 2011 ஆம் ஆண்டின் இறுதியளவில் பூர்த்திசெய்தல் செயல்முன்னேற்றம் கீழே தரப்படுகின்றது.

| | திணைக்களம் | மொத்த செயற்திட்ட பிரிவுகளின் எண்ணிக்கை | செயல் முன்னேற்றம் | 5% | 10% | 15% | 20% | 25% | 30% | 35% | 40% | 45% | 50% |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | மரபு விஞ்ஞானமும் பயிர் வளர்ப்பும் | 06 | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| (2) | பயிர் விஞ்ஞானம் | 31 | - | - | - | - | - | 02 | 02 | 02 | 04 | 07 | 03 |
| (3) | மண் மற்றும் தாவர ஊட்டச்சத்து | 39 | - | 02 | 01 | - | - | - | - | - | - | - | - |
| (4) | பயிர் நோய் விஞ்ஞானம் | 11 | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| (5) | உயிரியல் இரசாயனம் | 10 | - | - | - | - | 01 | - | - | - | 01 | - | - |
| (6) | உயிரியல் பிரிவு | 01 | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| (7) | பயன்பாட்டு ஆராய்ச்சி பிரிவு | 02 | - | - | - | - | - | - | - | - | - | - | - |

மேற்கூறிய செயற்திட்டம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மண் மற்றும் தாவர ஊட்டச் சத்து திணைக்களத்தினால் 10 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட 03 செயற்திட்டங்களை நிறைவேற்றும் செயல்முன்னேற்றம் 10% அளவில் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் இச்செயற்திட்டங்களுக்காக குறிப்பிடத்தக்க அளவான செயல்முன்னேற்றத்தை அடைந்துகொள்ள முடியாமையின் காரணமாகவும் கிடைத்த பணத்தின் அளவின் படி மிகவும் முக்கியத்துவமான செயற்திட்டங்களை மேற்கொள்ள முடியும் என்பதனாலும் செயற்திட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டிருந்தது.

(ii) உயிரியல் இரசாயன திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டிருந்த 40% பூர்த்திசெய்தல் செயல்முன்னேற்றத்தினை அடைந்து கொண்ட செயற்திட்டம் பெற்றுக்கொண்ட கொன்டென்சர் கருவியினை சுத்திகரிக்கமுடியாமையினால் தற்காலிகமக கைவிடப்பட்டிருந்தது.

## 2.2.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குருவிட்ட உப அலுவலகத்தில் இறப்பர் பாலை விற்பனை செய்வதற்காக விலை மனுக்கள் கோரப்படாது கொள்வனவாளர் ஒருவர் தெரிவுசெய்யப்பட்டிருந்ததுடன் 2011 ஆம் ஆண்டிற்குள் ரூபா 41,070,218 பெறுமதியான இறப்பர் பாற்கள் விற்கப்பட்டிருந்தன.

(ஆ) நிறுவனத்தில் களஞ்சிய பொறுப்பாளர் ஒருவர் இல்லாதிருந்ததுடன் கொள்வனவு செய்தல் மற்றும் களஞ்சிய செயற்பாடுகள் ஒரே உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படுவதன் காரணமாக இருப்புக் கட்டுப்பாடு தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு பலவீனமான நிலையில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(இ) உரிமை கைமாற்றம் செய்யப்படாது புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ் பயன்படுத்தும் உரிமையினைப் பொறுப்பேற்ற அளவ்வ நாரம்பொர தோட்டம் மற்றும் மொனராகலை குமாரவத்த தோட்டத்தில் கட்டிடங்களை நிர்மாணிப்பது தொடர்பாக ரூபா 14,751,127 தொகையும் நிலஅளவை நடவடிக்கைகளுக்காக ரூபா 90,000 தொகையும் செலவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) 2011 ஆம் ஆண்டிற்காக பரிசீலினை செய்யப்பட்ட 144 நாட்குறிப்பு பதிவுகளில் ரூபா 992,992 பெறுமதியான 45 நாட்குறிப்பு பதிவுகள் பிழைகளைத் திருத்தம் செய்வதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தமையால் கணக்கீடு செய்யும் நடவடிக்கை தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு பலவீனமான நிலையில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(உ) ரூபா 395,877 தொகையான இருப்புக்கள் பொருள் பெறுவனவுக் குறிப்புக்கள் வழங்கப்பட்டு இருப்பு பதிவேட்டிற்கு கொண்டுவரப்படாது உரிய பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்தது.

### 2.2.3 கூட்டிணைந்த திட்டமும் செயல்நடவடிக்கைத் திட்டமும்

2012-2016 காலத்திற்காக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. மிகுதி ஆண்டுகளுக்குரிய எதிர்வுகூறலுடன் ஒப்பிடக்கூடிய வகையில் கடந்த ஆண்டுகளுக்கான நிதிசார் தகவல்கள் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் 05 ஆண்டுகள் காலத்தில் அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட பௌதீக இலக்குகளுக்குரிய நிதிசார் பெறுமதி வெவ்வேறாகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. கணக்களிதன்மையும் நல்லாட்சியும்

### 3.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் போது 05 செலவு விடயங்கள் தொடர்பாக 07% இலிருந்து 48% வரை பாதீடு செய்யப்பட்ட செலவுகளை மிகைத்து உள்ளபடியான செலவுகள் செய்யப்பட்டமை அவதானிக்கப்பட்டதனால் பாதீடு செயற்திறனான நிதிக்கட்டுப்பாட்டு கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஆ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு

(இ) இருப்புக் கட்டுப்பாடு

(ஈ) கொடுப்பனவு சான்றுறுதிகளைத் தயாரித்தல்

(உ) கணக்கேடுகளைப் பேணுதல்

(ஊ) மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி நடவடிக்கைகளின் நிர்வாகம்

(எ) ஏடுகளைப் பேணுதல்

(ஏ) கொள்வனவு செய்தல்